©
தமிழ்நாடு அரசு
2024

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 3.20 காசு

தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 21] சென்னை, புதன்கிழமை, மே 22, 2024
வைகாசி 9, குரோதி, திருவள்ளுவர் ஆண்டு–2055

பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

அறிவிக்கை

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை

[அரசாணை (நிலை) எண். 104, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம். 5) துறை, 3 ஜூலை 2023.]

1972–ஆம் ஆண்டு வன விலங்குச் (பாதுகாப்பு) சட்டத்தின் 64 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் பின்வரும் விதிகளை இதனால் இயற்றுகிறார், அவையாவன:–

விதிகள்

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.–இந்த விதிகள் 2023–ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வேலிகள் (பதிவு மற்றும் ஒழுங்குமுறை) விதிகள் என அழைக்கப்படும்.

2. விளக்கம்.–இந்த விதிகளில் சந்தர்ப்பம் வேறுபொருள் குறித்தாலன்றி, மற்றபடி,

(அ) ''மாவட்ட வன அலுவலர்'' என்பது மாவட்ட வன அலுவலர் அல்லது வன விலங்குக் காப்பாளர் அல்லது புலிகள் காப்பகத்தின் துணை இயக்குநர் அல்லது வனக் கோட்ட அலுவலர் எனப் பொருள்படும்.

(ஆ) ''படிவம்'' என்பது இந்த விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் எனப் பொருள்படும்.

(இ) ''உரிமையாளர்'' என்பது யாதொரு உடைமையை வைத்திருப்பவர் அல்லது உடைமையாளர் அல்லது யாதொரு உடைமையை நிருவகிக்கும் நபர் என பொருள்படும்.

(ஈ) ''மின் அற்றல்'' என்பது சூரிய ஆற்றலினால் அல்லது மின்கலத்தினால் இயங்கும் அமைப்பு முறையை உள்ளடக்கியது என பொருள்படும்.

(உ) ''மின் வேலி'' என்பது மின்வேலியை தொடுகின்ற யாதொரு நபர் அல்லது விலங்கிற்கு மின் அதிர்வு கொடுப்பதற்காக மின்வேலி முழுவதும் மின்சாரம் பாய்கின்ற வேலி என பொருள்படும்.

(ஊ) ''உடைமை'' என்பது நிலம் அல்லது கட்டடத்தை உள்ளடக்கிய யாதொரு அசையா சொத்து என பொருள்படும்.

(எ) ''அட்டவணை'' என்பது இந்த விதிகளுடன் இணைக்கப்பட்ட யாதொரு அட்டவணை என பொருள்படும்.

(ஏ) ''நிறுவனம்'' என்பது மின் வேலிகள் அல்லது துணை மின் உபகரணங்களை தயாரிக்கும் அல்லது விற்பனைச் செய்யும் யாதொரு நிறுவனம் என பொருள்படும்.

(ஐ) இந்த விதிகளில் வரையறுக்கப்படாமல் பயன்படுத்தப்பட்ட சொற்களும் சொற்றொடர்களும், 1972–ஆம் ஆண்டு வன விலங்குச் (பாதுகாப்பு) சட்டத்தில் (மத்தியச் சட்டம் 53/1972) வரையறுக்கப்பட்டு அச்சட்டத்தில் அவற்றிற்கு வரையறுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருக்கும்

3. **மின்வேலி அமைப்பதற்கான அனுமதி மற்றும் பதிவுச் சான்றிதழுக்கான விண்ணப்பம்** (1) மாவட்ட வன அலுவலரிடம் அனுமதி பெறாமல், காப்பு வன எல்லையில் இருந்து 5 கிலோ மீட்டருக்குள் எவரும் தனது சொத்தில் அல்லது அதைச் சுற்றியுள்ள பகுதியில் மின் வேலி அமைக்கக் கூடாது.

(2) மின் வேலி அமைப்பதற்கான அனுமதிக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமையாளரால் படிவம் I–இல் மாவட்ட வன அலுவலரிடம் அளிக்கப்பட வேண்டும்.

(3) மாவட்ட வன அலுவலர் படிவம் I–இல் விண்ணப்பத்தைப் பெற்றவுடன் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உதவிக் கோட்டப் பொறியாளர் பதவித் தரத்திற்குக் குறையாத ஒரு அலுவலருடன் சேர்ந்து சொத்தினை (அந்த நிலப்பகுதியை) ஆய்வு செய்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்புகளை ஒத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, அந்த பகுதியின் நிலப்பரப்பு மற்றும் விலங்குகளின் பாதைகளின் தன்மையைப் பொறுத்து, முழு அளவிற்கு அல்லது குறைந்த அளவிற்கு மின் வேலி அமைப்பதற்கு படிவம் II–இல் அனுமதி வழங்கலாம் அல்லது உரிய காரணத்தை பதிவுச் செய்து விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்.

ஆனால், விண்ணப்பதாரரின் கருத்தினை கேட்காமல், நியாயமான வாய்ப்பு அளிக்கப்பட்டால், யாதொரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படக் கூடாது அல்லது விண்ணப்பதாரருக்கு குறைந்த அளவில் மின்வேலி அமைக்க அனுமதி வழங்கப்படக்கூடாது.

(4) துணை விதி (3) இன் கீழ் அனுமதி வழங்கப்பட்டதன் பேரில், உரிமையாளர் ஒரு மின் வேலியை அமைத்து அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் படிவம்–IV இல் உள்ள உறுதிமொழி மற்றும் அனுமதியின் நகல் ஒன்றுடன் படிவம்–III இல் மின்வேலியை பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

(5) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்புகளின்படி மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது என்று மனநிறைவடைவதன் பேரில், மாவட்ட வன அலுவலர் படிவம் V–இல் பதிவுச் சான்றிதழை வழங்க வேண்டும். இல்லையெனில் மாவட்ட வன அலுவலர், குறைபாடுகளை சரிசெய்யவும் துணை விதி (4) இன் கீழ் மின்வேலி அமைப்பதற்கு புதிதாக விண்ணப்பிக்கவும் உரிமையாளருக்கு அறிவுறுத்தலாம்.

(6) துணை விதி 3 அல்லது துணை விதி (5) இன் கீழ்' விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்கு மிகாத காலத்திற்குள் மாவட்ட வன அலுவலரால் ஆணை ஒன்று வெளியிடப்படும்.

4. **மேல்முறையீடு** (3)–ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (3) இன் கீழ் மாவட்ட வன அலுவலர் வழங்கிய ஆணையினால் பாதிக்கப்பட்ட யாதொரு நபரும், ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் அதிகார எல்லைக்குட்பட்ட வனப் பாதுகாவலரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

5–தற்போதுள்ள மின்வேலிகளுக்கான பதிவுச் சான்றிதழுக்கான விண்ணப்பம்

(1) இந்த விதிகள் நடை முறைக்கு வரும் நாளில் தனது சொத்திற்குறிய பகுதியில் மின்வேலி அமைத்துள்ள ஒவ்வொரு உரிமையாளரும். அட்டவணையில் குறிப்பிடபட்டுள்ள விவரக்குறிப்புகளின்படி மின்வேலி அமைக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்த பிறகு, அந்த நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள், மின்வேலியை பதிவு செய்வதற்காக படிவம் IV–இல் உள்ள உறுதிமொழியுடன் சேர்த்து மாவட்ட வன அதிகாரிக்கு படிவம்–III இல் விண்ணப்பிக்க வேண்டும்.

(2) துணை விதி (1) இன் கீழ் விண்ணப்பம் பெறப்பட்டவுடன் மாவட்ட வன அலுவலர், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உதவி கோட்டப் பொறியாளர் பதவித் தரத்திற்குக் குறையாத அலுவலருடன் சேர்ந்து சொத்தினை (அந்த நிலத்தினை ஆய்வு செய்து, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்புகளின்படி மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது என்று மனநிறைவு அடைந்தவுடன், பதிவுச் சான்றிதழை படிவம் V இல் வழங்க வேண்டும். மற்றபடி மாவட்ட வன அலுவலர், குறைபாடுகளை சரிசெய்யவும், துணை விதி (1) இன் கீழ் மின்வேலி அமைப்பதற்கு புதிதாக விண்ணப்பிக்கவும் உரிமையாளருக்கு அறிவுறுத்தலாம்.

(3) விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்கு மிகாத காலத்திற்குள் மாவட்ட வன அலுவலரால் இந்த விதியின் கீழ் ஆணை பிறப்பிக்கப்படும்.

6. பதிவுச் சான்றிதழின் செல்திறன் கால அளவு மற்றும் புதுப்பித்தல்.– (1) பதிவுச் சான்றிதழானது மூன்று வருட காலத்திற்கு செல் திறனுள்ளதாக இருக்கும்.

(2) பதிவுச் சான்றிதழைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமானது' அச்சான்றிதழ் காலாவதியாகும் நாளுக்கு மூன்று மாதங்களுக்கு முன் மாவட்ட வன அலுவலரிடம் அளிக்க வேண்டும். விதி 5 இல் கண்டுள்ள விதித்துறைகள் வேண்டிய மாறுதல்களுடன் பதிவுச் சான்றிதழைப் புதுப்பிப்பதற்குப் பொருந்தும்.

7. குறித்த காலத்திற்கொருமுறை ஆய்வு.–தொடர்புடைய பகுதியின் வனச் சரக அலுவலர் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தொழிற்பிரிவு மேல்முறையாள் மின் வேலிகள் அமைக்கப்பட்டுள்ள சொத்துக்களை (பகுதியை) பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை கூட்டாக ஆய்வு செய்து, அத்தகைய ஆய்வு தொடர்பான பதிவு புத்தகத்தை பராமரிக்க வேண்டும்

விவர அட்டவணை

(3 மற்றும் 5ஆம் விதிகளைக் காண்க)

மின் வேலி ஆற்றலூட்டிகளுக்கான தொழில்நுட்ப விவரக் குறிப்பீடுகள்

A. சூரிய ஒளிமின் கலத் தகடுகளின் தொகுதி

வகை–மோனோ கிரிஸ்டலின் / பாலி கிரிஸ்டலின் IEC 6215 சான்றளிக்கப்பட்ட தொகுதிகள் பயன்படுத்தப்பட வேண்டும். அதிக ஆற்றல் வெளியீட்டுத் திறன் 100 வாட்ஸ் / 12V ஆக இருக்க வேண்டும்.

B. மின்னாற்றல் அளிப்பான்: பயன்படுத்தப்படும் ஆற்றல் அளிப்பான் BIS–302–2–76 (இந்தியா) அல்லது IEC 60335 அல்லது EN 60335 பன்னாட்டு குறியீடுகள் மற்றும் தொடர் எண்ணுடன் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

சோதனைச் சான்றிதழ் அலகின் கருவியானது கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பீட்டுடன் பொருந்துகிறது என்பதை உறுதிப்படுத்தும் சோதனை முடிவுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(1) ஆற்றல் அளிப்பானின் வெளிப்புறத்தில் IP 54 பாதுகாப்பினைக் கொண்டிருக்க வேண்டும்.

Verified by RealEstate™

(2) 12 வோல்ட் DCக்கு மிகாத மின்கலத்தால் ஆற்றல் அளிப்பான் செயல்படக்கூடியதாக இருக்க வேண்டும்.

(3) உச்ச வெளியீட்டு மின்னழுத்தம் 10kv ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

(4) மின்வேலியின் வேக வர்க்க சராசரி மூலம் (RMS மின்னோட்டம் 10 ஆம்பியர்களுக்கு மேல் இருக்கக்கூடாது.

(5) மின் வேலியில் அதிர்வு இடைவெளி 1.1.5 வினாடிகளுக்கிடையில் இருக்க வேண்டும்.

(6) தூண்டு விசையின் (Impulse) காலம் 0.1 வினாடிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(7) ஒரு தூண்டு விசையின் அதிகபட்ச ஆற்றல் வெளியேற்றம் 500 ஓம்ஸ்–5 ஜூல்களின் அளவில் அளவிடப்படுகிறது.

ஒரு மின்சார வழங்கல் (Energizer) அமைப்பிலிருந்து மட்டுமே அதன் ஆற்றலைப் பெறும் மின்வேலி ஆற்றல் அளிப்பானை பயன்பாட்டாளர் பொருத்தக்கூடாது.

இ. மின்கலம்:

(1) மின்கலத்தின் வகையானது குறைந்த பராமரிப்பு கொண்ட குழாய் வடிவான (tubular) மின்கலனாக இருக்க வேண்டும்.

(2) மின்கலம் 12V/100AH திறன் கொண்டதாக இருக்க வேண்டும்.

(3) மின்கலம் மற்றும் ஆற்றல் அளிப்பானுக்கு வழங்கப்படும் மின்னூட்டத்தைக் கட்டுப்படுத்த முறையான மின்னூட்ட கட்டுப்பாட்டுடன் சூரிய ஆற்றல் மூலம் மின்கலம் மின்னூட்டம் செய்யப்பட வேண்டும். அமைவிடமானது சூரிய ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இல்லை என்றால், மின்மாற்றியுடன் (isolation transformer கூடிய மின்கல மின்னூட்டத்தைப் பயன்படுத்தலாம்.

(4) மின்கலத்தை மின்னூட்டம் செய்யும் போது ஆற்றல் அளிப்பானிலிருந்து ஆற்றல் துண்டிக்கப்பட வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் முதன்மை நேர்திசை மின்னோட்டம் (DC) வழங்கும் கருவியுடன் / பிரிவுடன் ஆற்றல் அளிப்பான்கள் இணைக்கப்படக்கூடாது

(5) சூரிய ஆற்றல் பயன்படுத்த இயலாத நேர்வுகளில், 12V மின்கலத்தை மின்னூட்டம் செய்ய மாறுதிசை (AC மின்னோட்டத்தைப் பயன்படுத்துவதற்கு மின்சாரத் துறையின் ஒப்புதல் பெறவேண்டும். BIS/IEC/EN முத்திரைக் கொண்ட மாறுதிசை (AC) மின்னூட்டப்பட்ட ஆற்றல் அளிப்பான்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் (TANGEDCO) அனுமதியுடன் வழங்கப்படலாம்.

D. மின்வேலியில் அமைக்கப்பட்டுள்ள எச்சரிக்கை ஒலி

எச்சரிக்கை ஒலி சாதனம் வெளிப்புறம் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

E. மின் வேலி கட்டமைப்பினை பொருத்தும் அமைப்பு முறை

இது துத்தநாகத்தால் தோய்க்கப்பட்டு மின்முலாம் பூசப்பட்ட எஃகு தகடுகளை கொண்டதாக இருக்க வேண்டும்.

F. வீடுகளில் வைக்கப்படும் ஆற்றல் அளிப்பான் மற்றும் மின்கலனுக்கான பெட்டி

இது பூட்டக்கூடிய கூடிய துத்துநாக தகடு கொண்ட பெட்டியாக இருக்க வேண்டும்.

G. மின்வேலி கம்பி

(1) இது குறைந்தபட்சம் 12 SWG அளவுகொண்ட (Standard wire gauge) உயர் இழுவிசையுடைய துத்தநாகத்தால் தோய்க்கப்பட்டு மின்முலாம் பூசப்பட்ட உயர் கார்பன் ACSR கம்பி வடமாக இருக்க வேண்டும். (2) தொங்கும் வகையிலானவை 14 SWG GI ஆக இருக்க வேண்டும் (அல்லது) துருப்பிடிக்காத எஃகு சூடான துத்தநாகத்தில் தோய்க்கப்பட்ட அலுமினிய கடத்தியில் வலுவூட்டப்பட்ட சுருள் திருகு கம்பியுடன் இருக்க வேண்டும். (10 அடி அளவுக்கு தொங்கக்கூடிய வகையில்) (3) தொங்கும் வகையிலான வேலி கம்பிகளுக்கிடையேயான தொலைவு (யானைகளுக்காக) 1.5 அடி அளவுக்கு குறைவாக இருக்கக்கூடாது.

(4) கட்டுகின்ற கம்பி உயர்தர துத்தநாக மேற்பூச்சுடன் 14 SWG GI கம்பியாக இருக்கப்பட வேண்டும்.

H. இடைப்பட்ட கம்பங்களுக்கு வேலி அமைக்கப்பயன்படுத்தும் மின் காப்பி

மின்காப்பி செய்வதற்கு பயன்படுத்தப்படும் பொருள் முதனிலை பாலிப்ரோப்பிலீன் அல்லது புற ஊதாக் கதிர் சோதனைக்குட்பட்ட பாலிகார்பனேட் ஆக இருக்க வேண்டும் இந்த மின்காப்பிகளுக்கான சோதனை செய்யப்பட்ட பொருளுக்கான சோதனைச் சான்றிதழ் மத்திய பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் Central Institute of Plastic Engineering & Technology (CIPET) இந்தியா, போன்ற அரசு அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களிலிருந்து அளிக்கப்பட வேண்டும்.

I. தகவிழுவை (Strain) அழுத்தம் கொண்ட மின் காப்பி

மின்காப்பி செய்வதற்கு பயன்படுத்தப்படும் பொருள் முதனிலை பாலிப்ரோப்பிலீன் அல்லது புற ஊதாக் கதிர் சோதனைக்குட்பட்ட பாலிகார்பனேட் ஆக இருக்க வேண்டும் மேலும் 15 KV தாங்குதிறன் கொண்டவையாக இருக்க வேண்டும். இந்த மின்காப்பிகளுக்கான சோதனை செய்யப்பட்ட பொருளுக்கான சோதனைச் சான்றிதழ் மத்திய பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் Central Institute of Plastic Engineering & Technology CIPET) இந்தியா போன்ற அரசு அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களிலிருந்து அளிக்கப்பட வேண்டும்.

J. நிரந்தர கம்பி இறுக்கி (Permanent wire tighterer)

இது அலுமினியம் உலோக கலவையால் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பதோடு 15 KV தாங்குதிறன் கொண்டவையாகவும், துருப்பிடிக்காது தடுக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

Verified @ RedState

K. இணைப்பு பற்றிறுக்கி

இதில் துத்தநாக மேற்பூச்சப்பட்டு நடுவில் துளையுடன்கூடிய MS பொருத்து வளையம் இருக்க வேண்டும்.

I. இடைப்பட்ட மின் கம்பம்

(1) இந்த மின்கம்பம், சூடான துத்தநாக திரவத்தில் தோய்க்கப்பட்டு T கோணத்தில் 25 மிமீ X 3 மிமீ இல் இருக்க வேண்டியதுடன் ஒவ்வொரு 6 மீட்டர் இடைவெளியில் பொருத்தப்பட வேண்டும். இந்த கம்பம் இந்திய தர நிர்ணய ஆணைய தரநிலைப்படி இருக்க வேண்டும்.

(2) யானை உட்பட விலங்குகளுக்கான தானியங்கி புற மின் அதிர்வுக் கருவிக்கான தரவரைவு குறிப்பீடு (AED Specification)– உயரம் 2.0 அடி BGL+2.0 அடி புறத்தெறிவு மற்றும் 10 ஆண்டு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்.

(3) யானை நீங்கலாக அனைத்து விலங்குகளுக்கான தானியங்கி புற மின் அதிர்வுக் கருவிக்கான தரவரைவு குறிப்பீடு (AED Specification) உயரம் 1.5 அடி நிலப்பரப்பிற்கு கீழ் (BGL)+6.0 அடி நிலப்பரப்பிற்கு மேல் (AGL)=7.5அடி

M. தெரு சந்திப்பு மின்கம்பம்

(1) கம்பி நுழைவதற்காக முன்னதாக துளையிடப்பட்ட GI வகை B 2" குழாயாக இருக்கப்பட வேண்டும். யானை உட்பட அனைத்து விலங்குகளுக்கான தானியங்கி புற மின் அதிர்வுக் கருவிக்கான தரவரைவு குறிப்பீடு (AED Specification) இந்திய தர நிர்ணய ஆணைய தரநிலைப்படி இருக்க வேண்டும். உயரம் 2.5 அடி நிலப்பரப்பிற்கு கீழ் (BGL)+8.0 அடி நிலப்பரப்பிற்கு மேல் (AGL)+2.0 அடி புறத்தெறிவு.

(2) யானை நீங்கலாக அனைத்து விலங்குகளுக்கான தானியங்கி புறமின் அதிர்வுக் கருவிக்கான தரவரைவு குறிப்பீடு (AED Specification) மின் கம்பம் இந்திய தர நிர்ணய ஆணைய தரநிலைப்படி இருக்க வேண்டும். உயரம் 2.5 நிலப்பரப்பிற்கு கீழ் (BGL)+6.0 அடி நிலப்பரப்பின் மேல் (AGL)+8.0அடி

N துணை குழாய்

(1) யானை உட்பட அனைத்து விலங்குகளுக்கான தானியங்கி புற மின் அதிர்வுக் கருவிக்கான தரவரைவு குறிப்பீடு (AED Specification). இந்த துணைக் குழாய் துத்தநாகம் பூசப்பட்ட இரும்பு (Galvanized iron) வகை B 1.1/4" குழாயுடன் இந்திய தர நிர்ணய ஆணைய தரநிலைப்படி இருக்க வேண்டும். நீளம் 8.0 அடியாக இருக்க வேண்டும்.

(2) யானை நீங்கலாக அனைத்து விலங்குகளுக்கான தானியங்கி புற மின் அதிர்வுக் கருவிக்கான தரவரைவு குறிப்பீடு (AED Specification) இந்த துணைக் குழாய் துத்தநாகம் பூசப்பட்ட இரும்பு (Galvanised iron) வகை B 1.1/4" குழாயுடன், இந்திய தர நிர்ணய ஆணைய தரநிலைப்படி இருக்க வேண்டும். நீளம் 6.75 அடியாக இருக்க வேண்டும்.

O. ஈயத்தினால் செய்யப்பட்ட கம்பி வட வகை

இது இருமுறை மின்காப்பிடப்பட்ட துத்தநாகத்தில் தோய்க்கப்பட்ட கம்பி வடமாக இருக்க வேண்டும். மேலும் இது 15KV வரை தாங்குத் திறன் கொண்டதாக இருக்க வேண்டும்.

P. நிரந்தர இழுவிசை சுருள்வில்

இது துத்தநாகம் பூசப்பட்ட 6mm கம்பி சுருள் இழுவிசை கொண்ட சுருள் வில்லாக இருக்க வேண்டும்.

Q. தரை மின் இணைப்பு ஏற்பாட்டு முறைகள்:

(1) நீண்ட காலத்திற்கு ஈரத்தன்மையை தக்கவைத்துக் கொள்வதற்காக சிறப்பு மின்முற்றாக்க வசதியுடன் கூடிய 4 அடி நீளமுள்ள துரு பிடிக்காத 8 மி.மீ எஃகு கம்பியை இது கொண்டிருக்க வேண்டும். ஆற்றல் அளிப்பானுக்காக 3 எண்ணிக்கையிலான மின் தரையிணைப்பிற்காகவும் மின்னல் தாக்காதவாறு 2 எண்ணிக்கையிலும், என குறைந்தது 5 எண்ணிக்கையிலான அரித்தழிக்காத மின்வாயுடன் கூடிய துணிப்பையில் இணைக்கப்பட்டுள்ள தரையிணைப்பு எஃகு மின்வாய்கள் இருக்க வேண்டும்.

(2) ஏனைய குடியிருப்பு பகுதிக்கான தரை மின் இணைப்புகளுக்கு அருகில் இத்தகைய தரை மின் இணைப்பு பொருத்தப்படக்கூடாது

(3) மின்வேலி தரை மின்இணைப்பிலிருந்து ஏனைய தரைமின் இணைப்பிற்கு குறைந்தப்பட்சம் 2 மீட்டர் தொலைவில் இருக்க வேண்டும்.

R. நியான் மின் சோதிப்பன் (Neon Tester):

நன்கு ஒளிரக்கூடிய ஐந்து நியான் குறியீட்டு விளக்குகள் ஏறத்தாழ கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறான அளவீடுகளை கொண்டிருக்க வேண்டும்.

மிக சிறப்பு	ஐந்து (Five Lights)	5000 வோல்ட்
சிறப்பு	நான்கு (Four Lights)	3800 முதல் 5000 வோல்ட்
இயல்பான நிலை	மூன்று (Three Lights)	2500 முதல் 3800 வோல்ட்
குறைவான	இரண்டு (Two Lights)	1800 முதல் 2500 வோல்ட்
மிக குறைவான	ஒன்று (One Light)	1000 முதல் 1800 வோல்ட்

Verified RealEstate™

S. மின்னல் திசைமாற்றுக் கருவி:

இது குறைந்தளவில் இரண்டு தரை இணைப்பு தடுப்பு குழாய்களை கொண்ட துத்தநாகம் தோய்க்கப்பட்ட மின்னல் தாக்காத கருவியாக இருக்க வேண்டும்.

T. மின்வேலிக்கான வாயில் கைப்பிடி:

இது முறையான மின்காப்புடன் கூடிய பாலி ப்ரப்பைலீன் கொண்ட மின்வேலிக்கான வாயில் கைப்பிடியாக இருக்க வேண்டும்.

U. பெயர் பலகை:

விவசாயிகளின் பெயர் திட்டத்தின் பெயர், நிறுவனம் மற்றும் துறையின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு 1.5 X 1.5 அடி அளவில் (நெகிழி பலகை) மஞ்சள் நிறப்பிண்ணனியில் உரிய அளவிலான பச்சை வண்ண எழுத்தில் சரியான பெயர் பலகை வைக்க வேண்டும்.

V. கட்டமைக்கப்பட்ட மின் வாயில்:

இது 5.5 அடி உயரத்தில் 100 மி.மீ சதுர தூண் MS குழாயுடன் கூடிய 40 மி.மீ சதுர MS குழாயுடன் கட்டமைக்கப்பட்ட 16 அடி இருமுறை கட்டமைக்கப்பட்ட மின் நுழைவாயிலாக இது இருக்க வேண்டும்.

W.கருவிகலன்

இதில் மின்கம்பி இறுக்கி கைப்பிடி, திருகுக் கருவிகள், இடுக்கு குறடுகள் மற்றும் பற்றுக்கருவியை இறுக்குவதற்காக இரு முனையாக்கப்பட்ட திருகிகள் இருக்க வேண்டும்.

X.கட்டுமானப் பணிகள்

மூலை பகுதிகளில் மின்கம்பம், தாங்கு குழாய் மற்றும் வாயில் தாங்கு தூண் ஆகியவற்றை கற்காரை கலவையுடன் (1:2.4) அமைப்பதற்கு தேவையான கட்டுமான பணிகள் பொருத்துகின்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

Y.கண்காணிப்பு சாதனங்கள்:

மின்வேலியில் நேரடியான ஒளி மற்றும் GSM அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்பு அல்லது எண்மிய வோல்ட் மீட்டர் 15KV வரையிலான மின்வேலி மின்னழுத்தத்தை எண்மிய முறையில் வெளிப்படுத்த வேண்டும். இது அதிர்வுறாத நெகிழியால் ஆனது.

Z. பொதுவான வழிக்காட்டிக்குறிப்புகள்:

1. பயன்பாட்டாளர் மின்கம்பி செல்லும் (EB Line) வழியாக மின்வேலியை அமைக்கக் கூடாது மின்வேலியின் மேற்பகுதிக்கும் முதன்மை கம்பிக்கும் இடையில் 6 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும்.

2. ஒரு மின்வேலியை முடிந்தவரை மிகக் குறைந்த அளவில் நுழையக்கூடிய வகையில் நிறுவ வேண்டும்.

3 மின்வேலி அலகு பொருத்தப்பட்டுள்ள இடங்களில் வயலின் அனைத்து மூலைகளிலும் மின்வேலியின் நேரடி ஒளிபடுமாறு அமைக்கப்பட வேண்டும்.

4. வேலி, சுவற்றுடன் முட்கம்பி அல்லது வரி முட்கம்பிகள் இணைக்கப்பட கூடாது. அத்தகைய கட்டுமானங்களில் பொருத்தப்பட்டுள்ள யாதொரு முட்கம்பி வரிமுட்கம்பி அல்லது அதனைப் போன்ற மின்கம்பி அமைப்புகளை அகற்றப்பட வேண்டும்.

5. பன்னாட்டு மின் தொழில்நுட்ப ஆணையம் (IEC 60335) இந்திய தரநிர்ணய ஆணையத்தின் (IS 302–2–76) விதித்துறைகளின்படி மின்வேலிகள் பொருத்தப்பட வேண்டும் அல்லது அமைக்கப்பட வேண்டும்.

6. எச்சரிக்கை குறியீடுகள்: சட்டப்படியான நிறம் மற்றும் குறியீடுகளில் புற ஊதாக்கதிர்களால் நிலைப்படுத்தப்பட்ட பாலி எத்திலீன் நெகிழியில் எச்சரிக்கை குறியீடு பலகைகள் இருக்க வேண்டும். "எச்சரிக்கை மின்வேலி" எனத் தெரிவித்துக்கும் எச்சரிக்கைக் குறியீடுகள் மின்வேலிகளில் முறையாக காட்சிப்படுத்தப்பட வேண்டும். மேலும், மின்வேலி அமைந்திருப்பதை குறிப்பிடும் உலகளாவிய குறியீடுகளும் எச்சரிக்கை குறியீடுகளில் இடம் பெற்றிருக்க வேண்டும். வேலியின் சுற்றளவுப் பகுதியில் ஒவ்வொரு நுழைவாயில் அல்லது நுழைவுப் பகுதியில் எச்சரிக்கை குறியீடுகளை அமைக்க வேண்டும். அவற்றின் இடைவெளி 30 அடிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும். மின்வேலி பகுதிகளின் இருப்புறத்திலிருந்தும் எச்சரிக்கை குறியீடுகள் தெரிய வேண்டும். மேலும் 12 அங்குலம் X 18 அங்குலம் என்ற அளவிற்கு குறையாமல் இருக்க வேண்டும். எச்சரிக்கை குறியீடுகள் படிக்கும் வகையிலும் நன்றாக தெரியும் வகையிலும் விரைவாக கண்டறியும் வகையிலும் அமைந்திருப்பதை உறுதி செய்வதற்காக நபர் ஒருவர் அக்குறியீடுகளை நல்ல நிலையில் பராமரித்து வர வேண்டும்.

7. அவசரக்கால பயன்பாடு: அவசரக்கால பயன்பாட்டிற்காக தானாக மின் இயக்கத்தை நிறுத்திக் கொள்வதற்கான வழிவகை மின்விசைகளின் இணைப்பைத் துண்டித்தல் மற்றும் இதுபோன்ற ஏனைய கருவிகள் பொருத்தப்பட வேண்டும்.

Verified RedEstate

படிவம்–I

(3 ஆம் விதியைச் சேர்ந்த துணை விதிகள் (2) மற்றும் (3)–ஐக் காண்க)

மின்வேலியை அமைப்பதற்கான விண்ணப்பம்

1.	விண்ணப்பதாரரின் பெயர்	:	
2.	தந்தை பெயர்	:	
3.	வயது	:	
4.	முகவரி	:	
5.	உடைமையின் நில அளவை எண்	:	
6.	நிலத்தின் / மனையின் அமைவிடம்	:	
7.	நிலத்தின் வகை (விவசாய நிலம் / வீடு / மற்றவை)	:	
8.	நிலப் பகுதிக்குள் வந்து போகும் விலங்குகளின் வகை	:	
9.	மின்வேலியை அமைப்பதற்கான காரணம்	:	
10.	மின் வேலியை அமைப்பதற்காக கருதப்பட்ட நிலத்தின் பரப்பளவு	:	
11.	மின்வேலிக்கு மின்சாரம் வழங்கும் முறை (TANGEDCO / சூரிய ஆற்றல் / மற்றவை)	:	
12.	கருதப்பட்ட மின் வேலியின் விவரக்குறிப்புகள் அ. மின்னழுத்தம் ஆ. மின்னோட்டம் இ. பாதுகாப்பு சாதன வசதிகள் ஈ. தரையிணைப்பு	:	

இடம்:

நாள்:

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

படிவம்–II

(3(3) ஆம் விதியைக் காண்க)

மின்வேலி அமைப்பதற்கு அனுமதி வழங்குதல்.

அனுமதி எண்.....

நாள்.....

.....என்ற முகவரியில் வசிக்கின்ற.....என்பவரின் மகன் / மனைவி / மகள் ஆகிய திரு / திருமதி / செல்வி .....என்பவருக்கு.....பரப்பளவில்..... அமைவிடத்தில் உள்ள நிலத்தில் மின்வேலியை அமைப்பதற்கு இதனால் அனுமதி அளிக்கப்படுகிறது.

2. 2023–ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்வேலியை அமைப்பதற்கான (பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துதல்) விதிகளின்படி மின்வேலியை அமைத்து 90 நாட்களுக்குள் மின்வேலியை பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்குமாறும் உங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இடம்:

நாள்:

மாவட்ட வன அலுவலரின் கையொப்பம்.

நாள்.....

முத்திரை.....

Verified RealEstate™

படிவம்–III

(3(4) மற்றும் 5(1)ஆம் விதிகளைக் காண்க)

மின்வேலியை பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

1.	விண்ணப்பதாரரின் பெயர்	:
2.	தந்தை பெயர்	:
3.	வயது	:
4.	முகவரி	:
5.	கிராமம் மற்றும் நிலத்தின் (உடைமை) நில அளவை எண்	:
6.	நிலத்தின் / மனையின் / அமைவிடம்	:
7.	நிலத்தின் வகை (விவசாய நிலம் / வீடு / மற்றவை)	:
8.	நிலப் பகுதிக்குள் வந்து போகும் விலங்குகளின் வகை	:
9.	மின்வேலியை அமைப்பதற்கான காரணம்	:
10.	மின் வேலியை அமைப்பதற்காக கருதப்பட்ட நிலத்தின் பரப்பளவு	:
11.	பயன்படுத்தப்படும் ஆற்றல் அளிப்பான் குறித்த விவரக்குறிப்புகள்	:
	அ. மின்வேலிக்கு மின்சாரம் வழங்கும் முறை (சூரிய ஆற்றல் /TANGEDCO / மற்றவை)	
	ஆ. மின்னழுத்தம் / மின்சார மதிப்பீடு	
	இ. பொருத்தப்பட்ட பாதுகாப்பு சாதன வசதிகள் குறித்த விவரங்கள்	
12.	மின் வேலியின் வகை: கீழ்நோக்கி சரிவாக தொங்குவது போன்ற அமைப்பு / வழக்கமானது	:
13.	மின் வேலியை அமைப்பதற்காக படிவம் – II இல் அளிக்கப்பட்ட அனுமதியின் விவரங்கள் (பொருந்துமாயின்)	:
	இல்லையெனில், தற்போதுள்ள மின்வேலி எந்த நாளிலிருந்து அமைக்கப்பட்டுள்ளது.	

இடம்:

நாள்:

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

*வழங்கப்பட்ட அனுமதியின் நகல் இணைக்கப்பட வேண்டும்.

படிவம்–IV

(3(4) மற்றும் 5(1)ஆம் விதிகளைக் காண்க)

உறுதிமொழி

திரு / திருமதி..... த/பெ.....வயது.....ஆண்டுகள் ..... கிராமம் / நகரம் ..... வட்டம் .....மாவட்டம்.....மாநிலத்தில் வசிக்கின்ற நான், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்வேலியை அமைப்பதற்கான (பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துதல்) விதிகளின் விவர அட்டவணையில் குறிப்பிடப்படுள்ள தொழில்நுட்ப விவரக்குறிப்புகளின் படி, ...நிலத்தில் (நில அளவை எண்) நாங்கள் மின்வேலியை அமைத்துள்ளோம் என திருவாளர்கள் (நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி).....சார்பில் இதனால் உறுதியளிக்கிறோம்.

இடம்:

நாள்:

(முத்திரை மற்றும் நாளுடன் நிறுவனத்தின்
பிரதிநிதியின் கையொப்பம்)

Verified RealEstate™

படிவம்–V

(3(5) மற்றும் 5(2)ஆம் விதிகளைக் காண்க)

மின்வேலிக்கான பதிவுச் சான்றிதழ்

பதிவு எண்.....

நாள்.....

1.	விண்ணப்பதாரரின் பெயர்	:
2.	தந்தை பெயர்	:
3.	வயது	:
4.	முகவரி	:
5.	நிலத்தின் (உடைமை) நில அளவை எண்	:
6.	நிலத்தின் / மனையின் அமைவிடம் (புவி ஒருங்கிணைப்புகளுடன்)	:
7.	நிலத்தின் வகை (விவசாய நிலம் / வீடு / மற்றவை)	:
8.	நிலப் பகுதிக்குள் வந்து போகும் விலங்குகளின் வகை	:
9.	மின்வேலியை அமைப்பதற்கான காரணம்	:
10.	மின் வேலியை அமைப்பதற்காக அனுமதிக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு	:
11.	அனுமதிக்கப்பட்ட ஆற்றல் அளிப்பான் குறித்த விவரக்குறிப்புகள் அ. மின்வேலிக்கு மின்சாரம் வழங்கும் முறை (சூரிய ஆற்றல் / (TANGEDCO / மற்றவை) ஆ. மின்னழுத்தம் மின்சார மதிப்பீடு இ. பொருத்தப்பட்ட பாதுகாப்பு சாதன வசதிகளின் விவரங்கள்	:
12.	அனுமதி வழங்கப்படுவதற்கான காலம்	:

இடம்:

மாவட்ட வன அலுவலரின் கையொப்பம்

நாள்.....

முத்திரை.....

சுப்ரியா சாஹூ,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

(தமிழாக்கம்)

ந. அருள்,
இயக்குநர் (கூ.பொ),
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Verified RealEstate ™